## DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII, Cr.P.C.)

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, KANGEYAM

| | | |
|---|---|---|
| Case number | : | CC 244 OF 2024 |
| Deposition of witness | : | **PW - 3** |
| Name | : | சுப்பிரமணி |
| Husband Name | : | ரங்கசாமி |
| Village | : | |
| Taluk | : | |
| Age | : | 51 |

**All accused produced through V.C.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 18.12.2024.

**முதல் விசாரணை**

1. நான் தற்போது திருப்பூர் மாவட்டம் ஒரு விரல் ரேகை பிரிவில் காவல் துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 18.09.2024 ம் தேதி மாலை நான் அலுவலகத்தில் இருந்த போது சுமார் 7.15 மணிக்கு காங்கேயம் காவல் நிலைய உதவி ஆய்வாளர் அவர்களிடமிருந்து வேண்டுகோள் கடிதம் கிடைக்கப்பெற்று அதில் கன்னக்களவு முயற்சி தொடர்பாக காங்கேயம் காவல் நிலைய குற்ற எண்.467/2024 சட்டப்பிரிவு 331, 305 A r/w 62 B.N.S வழக்கின் படி, சம்பவயிடமான காங்கேய டவுன் சத்தி நகரில் உள்ள வாதி பழனிச்சாமி வீட்டிற்கு வந்து வழக்கின் புலன் விசாரணைக்கு உதவியாக சம்பவயிடத்தை ஆராய்ந்து அறிக்கை தருமாறு கேட்டுக்கொண்டதின் பேரில் நானும் எனது அலுவலகத்தில் பணிபுரியும் காவல் உதவி ஆய்வாளர் முத்துக்குமார் என்பவரும் சம்பவயிடத்தை பார்வையிட்டு, வீட்டினுள் இருந்த இரும்பு பீரோவில் சேப்டி லாக்கரில் உள்புறமாக பதிவாகியிருந்த இரண்டு ரேகைகளை சேகரித்தோம். **(மேற்படி வேண்டுகோள் கடிதம் அ.சா.ஆ.3 ஆகவும், SOC விசிடிங் ரிப்போர்ட்**

**அ.சா.ஆ.4 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது).**

2. அவற்றை புகைப்பட நிபுணரால் புகைப்படம் எடுக்கப்பட்டது. அதன்பிறகு வாதி (Inmate) பழனிச்சாமியின் ரேகையை பதிவு செய்துகொண்டோம். பின்னர் அலுவலகம் சென்று அதற்கு S1, S2 என்று குறியீடு செய்தோம். அதில் S2 என்று குறியீடு செய்த ரேகையானது ஒப்பீடு செய்து பார்க்க உகந்ததாக இல்லை. S1 என்று குறியீடு செய்த ரேகையானது வாதி பழனிச்சாமி என்பவரது ரேகையுடன் ஒப்பீடு செய்து பார்த்தபோது அவரது ரேகையுடன் ஒத்துப்போகவில்லை அதற்கான அறிக்கையினை Inmate finger print comparission report என்ற தலைப்பில் கடந்த 20.09.2024 தேதியன்று அனுப்பிள்ளோம். **(Inmate finger print comparission report அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

3. பிறகு தமிழகம் முழுவதும் உள்ள மற்ற மாவட்ட குற்றவாளிகளை குற்றவழக்குகளில் கைதான நபர்களுடன் ஒப்பீடு செய்து பார்த்ததில். அரியலூர் மாவட்டம் மின்சுருட்டி காவல் நிலைய குற்ற எண். 287/2022 சட்டப்பிரிவு 457, 380, 411 இதச வழக்கில் கைதான ராஜா வயது 34 த/பெ. மாயவன் என்பவரது இடதுகை நடுவிரல் ரேகையுடன் சம்பவத்திடத்தில் பீரோவின் லாக்கரில் எடுத்த S1 என்று குறியீடு செய்த ரேகையுடன் ஒத்துப்போனது என்பதை Unidentified chance print comparission report என்ற தலைப்பில், SOC No.307/SDFPB/TPR/24 தேதி 20.09.2024 என்ற அறிக்கையுடன், சம்பவயிடத்தில் எடுத்த S1, S2 என்று குறியீடு செய்த ரேகையின் புகைப்படத்தையும் இணைத்து அவற்றை காவல் உதவி ஆய்வாளர் மூலமாக நீதிமன்றத்திற்கு கடந்த 20.09.2024 தேதியன்று அனுப்பி வைத்தேன். **( Unidentified chance print comparission report அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

4. அதன் பின்னர் 25.10.2024 தேதி நான்கு எதிரிகளையும் கைது செய்து அவர்களின் ரேகைகளையும் ஏற்கனவே இவ்வழக்கில் சேகரிக்கப்பட்ட S1 என்று குறியீடு செய்த ரேகையுடன் ஒப்பீடு செய்து அறிக்கை வழங்குமாறு வேண்டுகோள் கடிதத்தையும் காவல் உதவி ஆய்வாளர் அவர்களிடம் பெற்று, அதன் பேரில் ஆய்வு செய்தபோது ராஜா என்பவரின் இடது கை நடுவிரல் ரேகையானது சம்பவயிடத்தில் எடுத்த S1 என்று குறியீடு செய்த ரேகையுடன் ஒத்துப்போனது என்பதை Identification report (அடையாள அறிக்கை) என்ற தலைப்பில் கடந்த 29.10.2024 தேதி காவல் உதவி ஆய்வாளர் அவர்களின் மூலமாக நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன்.

5. எனது இரண்டு விரிவான கருத்துரைகள், கருத்துரை –1 Certificate No.97/SOC/SDFPB/TPR/Police/2024 என்ற தலைப்பிலும், கருத்துரை –2 Certificate No.97/SOC/SDFPB/TPR/Police/2024 என்ற தலைப்பிலும் தனித்தனியாக புகைப்படம் பெரிதுபடுத்தி சிவப்பு மையினால் தெளிவாக குறிப்பிட்டும் கடந்த 29.10.2024 ம் தேதி காவல் உதவி ஆயவாளர் மூலமாக நீதமன்றத்திற்கு அனுப்பினேன். இது சம்பந்தமாக காங்கேயம் காவல் உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள். **(ஒப்பினியன் ரிப்போர்ட் அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது, Identification report அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது, S1 மற்றும் S2 புகைப்படங்கள் அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது, அரியலூர் மாவட்டம் மீன்சுருட்டி காவல் நிலைய குற்ற எண்.287/2022 அதில் கைது செய்யப்பட்ட ராஜா கைவிரல் ரேகை பதிவு அ.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது ).**

<u>1 மற்றும் 2 ம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. பொதுவாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய அரைமணி நேரம் ஆகும் என்றால் சரிதான். காங்கேயம் – திருப்பூர் 25 கிலோமீட்டர்

இருக்கும். மாலை 4.30 – 5.30 மணியளவில் காங்கேயம் – திருப்பூர் சாலையில் போக்குவரத்து அதிகமாக இருக்கும் என்றால் சரிதான். இந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட நேரம் 4.45 என்றால் சரிதான். நான் கைரேகை எடுத்த இடத்தில் பழனிச்சாமி மட்டும் தான் Inmate அங்கு வேறு யாரும் கிடையாது. அது வீடு என்றால் சரிதான்.

2. அ.சா.ஆ.9 புகைப்படங்கள் எடுப்பதற்கு போலிஸ் கேமராமேனிற்க்கு நான் வேண்டுகோள் கடிதம் கொடுத்தேனா என்றால் இல்லை, விசாரணை அதிகாரி தான் கொடுப்பார். PSO 836(4)(k) முறையாக பின்பற்றப்படாமல் கைரேகை எடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் போலிசார் விசாரணையின் போது எனக்கு வேண்டுகோள் கடிதம் மாலை 5.15 மணிக்கு கிடைத்ததாக கூறினேனா என்றால் இல்லை, 7.15 மணிக்கு தான் கிடைத்தது. நான் தாக்கல் செய்த அ.சா.ஆ.4 ஆவணத்திலும் 5.15 மணிக்கு தான் என்று கிடைத்தாக கூறியுள்ளேன் என்றால் அழைப்பேசி வாயிலாக தகவல் 5.15 க்கு கிடைத்தது. ஆனால் ஆவணமாக 7.15 மணிக்கு தான் பெறப்பட்டது.

3. அழைப்பேசி வாயிலாக தகவல் கிடைத்ததை போலிசார் விசாரணையிலும் முதல் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் சம்பவயிடத்தை மாலை 6.30 மணிக்கு பார்த்ததாக அ.சா.ஆ.4 ஆவணத்தில் உள்ளது என்றால் சரிதான். 2 ம் எதிரி கைது செய்யப்பட்ட பின்பு தான் சம்பவயிடத்தில் கைரேகை எடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. நான் சொல்லும் விதத்தில் சரியான நேரத்தில் கைரேகை எடுக்கப்படவில்லை என்றாலும் போலிசார் கேட்டதின் பேரில் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அங்கு எடுக்கப்பட்ட கைரேகைக்கும் 2 ம் எதிரிக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**3 எதிரி குறுக்கு விசாரணை**

**3 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.**

**4 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

**4 ம் எதிரி தரப்பில் வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

B DHARANEETHER

Digitally signed by B DHARANEETHER
Date: 2024.12.18 18:51:04 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம் (FAC)